1982 மார்ச் 3]

வெளிநாடுகளில் வேலை தேடித் தருவதற்கான தனியார் நிறுவனங்கள்

* வினா எண். 338—திரு. வ. சத்தியமூர்த்தி, திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வெளி நாடுகளில் வேலை தேடித் தருவதாக ஆயிரக் கணக்கான ஏழைத் தொழிலாளர்களிடம் பல ஆயிரம் ரூபாய் களை இடைத் தரகர்கள் மோசடி செய்வது பற்றி அரசு அறியுமா?

(ஆ) தனியார் மூலம் வெளி நாடுகளுக்கு வேலை நிமித்தம் அனுப்புவதை தடை செய்து அரசே அப்பணியைச் செய்ய முன் வருமா ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: (அ) ஆம். பத்தொன்பது வழக்குகள் காவல் துறையினரால் மோசடி புரிபவர்கள் மீது போடப்பட்டுள்ளது.

(ஆ) தனியார் நிறுவனங்களைத் தடை செய்வதற்கு மைய அரசால்தான் செய்ய முடியும். தமிழக அரசு இதுபற்றி பரிந் துரை செய்யலாமே தவிர தமிழக அரசே தனியார் நிறுவனங் களைத் தடை செய்வதற்கு அதிகாரம் இல்லை. தமிழக அரசைப் பொறுத்த வரையில் இங்குள்ள திறமைசாலிகளுக்கு அயல் நாடுகளில் வேலை பெற்றுத் தருவதற்காக அயல்நாட்டு வேலை வாய்ப்பு நிறுவனம் என்ற அமைப்பு ஒன்றை நிறுவி யுள்ளது, இந்த நிறுவனம் இந்திய நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் 30—11—1978-ல் பதிவு செய்யப்பெற்றுள்ளது. இந்த நிறுவனம் சென்னை-4-ல் 117, டாக்டர் இராதாகிருஷ்ணன் சாலையில் இயங்கி வருகிறது.

திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலுள்ள பல கிராமங்களிலுள்ள ஏழை மக்கள் பலர் 10 ஆயிரம் ரூபாய்க்கு மேல் கொடுத்து ஏமாற்றம் அடைந்திருக்கிறார்கள். குறிப்பாக இராமநாதபுரம் மாவட்டத் திலுள்ள அனேக கிராமங்களில் ஒவ்வொரு கிராமத்திலிருந்தும் சுமார் 20 பேர்களுக்கு மேல் இப்படி ஏமாற்றப்பட்டு இருக்கிறார் கள். இப்படி தமிழக மக்கள் இதனால் அதிகம் பாதிக்கப்படுவ தால் இதிலே தமிழக அரசு தலையிட்டு மத்திய அரசோடு தொடர்பு கொண்டு இவ்வாறு தனியார்கள் மோசடிகளைத் தவிர்க்கும் வகையிலே தனியார்கள் வெளி நாடுகளுக்கு ஆட்களை அனுப்பினால் கூட பதிவு செய்து கொண்டுதான் அனுப்ப வேண் டும் என்ற ஒரு விதி முறையினைக் கொண்டுவர அரசு முயலுமா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY — TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போன்று தற்போது இருக்கக் கூடிய விதி முறைகளை மீறித்தான் இத்தகைய தனியார்கள் இத்தகைய செயல்களிலே ஈடுபட்டு பொது மக்களுக்கு ஊறு விளைவித்துக் கொண்டு வருகிறார்கள். தமிழக அரசினைப் பொறுத்த வரையிலே மத்திய அரசோடு தொடர்பு கொண்டு இத்தகைய நிறுவனங்களைத் தடை செய்வதற்கான முயற்சிகளை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவரவர்களே, இப்படி தனியார்கள் பலர் மோசடி செய்ததின் காரணத்தினால் ஆயிரக்கணக்கான பேர் ஏமாற்றப்பட்டு தெருவிலே நிற்கக் கூடிய நிலைமை இருக்கின்றது. இதைத் தவிர்ப்பதற்கு மாநில அரசு மத்திய அரசோடு தொடர்பு கொண்டு இதற்காக நாமே ஒரு வாரியம் அமைத்து அவர்கள் மூலமாகத்தான் எந்த ஒரு நபரும் வெளி நாடுகளுக்கு பணியாளர்களை அனுப்பலாம் என்ற நிலைமையை உருவாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : தலைவரர்களே, இதற்கு நான் ஏற்கனவே விடை அளித்ததை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கவனித்திருப்பார்கள் என்று கருதுகிறேன். மத்திய அரசோடு தொடர்பு கொண்டு இதற்காகத் தனியாக வாரியம் அமைக்க வேண்டிய அவசியம் இல்லை என்ற காரணத்தால் தமிழக அரசே இதற்கான நிறுவனம் ஒன்றை நிறுவி அதன் மூலமாக தற்போது அயல்நாடுகளுக்கு பணியாளர்கள் அனுப்பப்பட்டு வருகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொன்னது போன்று தமிழகத்திலுள்ள மக்கள் அந்த நிறுவனத்தினை பயன்படுத்திக் கொண்டு அயல்நாடுகளுக்குச் சென்று வேலை வாய்ப்புகள் பெற வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவரவர்களே, தமிழக அரசால் ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற அந்த நிறுவனத்தில் ஒரு அதிகாரி இருக்கிறார். அவர் மூலமாக வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டவர்களின் எண்ணிக்கை 200-க்கு உட்பட்டுத்தான் இருக்கின்றது. கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளில் இவ்வாறு அனுப்பப்பட்டவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாக இருப்பதால் இதை அதிகப்படுத்துவதற்கான ஒரு நிலையை உருவாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : தலைவரவர்களே, இந்த நிறுவனம் 1—3—1979 முதல் செயல்பட்டுக் கொண்டு வருகின்றது. அப்போது முதல் 31—12—1981 வரையில் இந்த

நிறுவனத்திலே பதிவு செய்தவர்களின் எண்ணிக்கை 5,517 ஆகும். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த நிறுவனத்தின் மூலமாக வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டவர்களின் எண்ணிக்கை 200 பேர்கள் தான் என்று சொல்வது தவறான தகவல். அந் நிறுவனம் துவங்கப்பட்ட நாளிலிருந்து 31—12—1981 வரை 423 பேர் அயல்நாடுகளுக்கு வேலைவாய்ப்பு பெறுவதற்காக அனுப்பப்பட்டிருக்கிறார்கள்.

(முற்பகல் 10.10)

திரு. கே. எஸ். ஜி. ஹாஜா செரீப் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு அதற்காக நிறுவனம் ஏற்படுத்தியிருந்தாலும் கூட, பல்வேறு தனியார் நிறுவனங்கள், இதற்காக பதிவு செய்து கொண்டு, மோசடி செய்து வருகிறார்களே, அதை தடை செய்வ தற்கு, இந்த அரசு உடனடியாக நடவடிக்கையெடுக்க முன் வருமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே இதற்காக விடையளித் திருக்கிறேன். இதனை குறித்து பரிந்துரை செய்வதற்குத்தான் தமிழக அரசால் முடியுமே தவிர, தடை செய்வதற்குரிய அதி காரம் இல்லை. அதனை மத்திய அரசுதான் செய்ய வேண்டும். தமிழக அரசு நிச்சயமாக பரிந்துரை செய்யும்.

மதுரை மாவட்ட ஆதிவாசி மற்றும் பழங்குடி மக்களுக்கு குதிரைகள் வழங்கும் திட்டம்.

*வினா எண் 339—திரு. என். பழனிவேல்: மாண்புமிகு ஆதிதிரா விடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டத்தில் வசிக்கும் ஆதிவாசி பழங்குடி மக்களுக்கு இலவசமாக குதிரைகள் வாங்கிக் கொடுக்கப்படு கின்றதா ?

(ஆ) ஆம், எனில் கடந்த 3 ஆண்டுகளில் எவ்வளவு பேர் களுக்கு வாங்கித் தரப்பட்டது ?

(இ) அதன் மதிப்பு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : (அ) ஆம்.

(ஆ) 18 பேர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

(இ) அதற்காக ரூ. 10,800 செலவிடப்பட்டுள்ளது.